# DIOCESAN CIRCULAR LETTERS

No.C.11/2022 31.08.2022

அன்பிற்குரிய சகோதர அருள்பணியாளர்களுக்கு அன்பான வணக்கமும், வாழ்த்துக்களும்.

மதுரையில் நடைபெற்ற அன்புறவுக் கூட்டம் இனிதே நடைபெற்று முடிந்தது. அதில் தூய ஆவியானவரின் வழிநடத்துதலை அனைவராலும் உணர முடிந்தது. திறந்த மனதோடு ஒருவருக்கொருவர் அன்பு உறவுக்காட்டி, கலந்துரையாடி நமது வாழ்வும் பணியும் பற்றிய தெளிவுகளைக காண முயற்சித்தோம். இதற்காகத் திட்டமிட்டு அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்த ஒருங்கிணைப்புக் குழுவிற்கும், சிறப்பாகப் பங்கேற்ற உங்கள் அனைவருக்கும் நன்றியும் பாராட்டுக்களும். இதன் தொடர் செயல்பாடுகளிலும் அனைவரும் முழுமையாகப் பங்கேற்று பங்களிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இதைப்போன்று, ஆயர்கள் மாமன்றம் 2021–2023க்காகப் பங்கு அளவில் நடைபெற்ற இணைந்து பயணித்தல் கலந்துரையாடல்களையும் சிறப்பாகச் செய்து முடித்துள்ளோம். அனைவருக்கும் பாராட்டுக்கள். இக்கலந்துரை யாடல்கள் பங்கு மாமன்ற அமர்வுகளில் (Parish Synod) நிறைவு பெற வேண்டும் என்பது தாங்கள் அறிந்ததே. எனவே, நமது மறைமாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பங்கும் இணைந்து பயணித்தல் பாணியை பின்பற்றி ஒருவருக்கொருவர் செவிமடுத்து, கலந்துரையாடி, தேர்ந்து தெளிந்து பங்கிற்கான ஐந்து ஆண்டு / ஓர் ஆண்டுத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்த அழைக்கப்படுகின்றோம்.

இதற்கான வழிமுறைகள் உங்களுக்கு கையேடாகத் தரப்பட்டுள்ளன. மறைமாவட்டத்தின் இலட்சியக் கனவும் சுருக்கமாக கொடுக்கப் பட்டுள்ளது. மேலும் நாம் திட்டமிட வேண்டிய துறைகளும் ஒரு மாதிரிக்காகத் தரப்பட்டுள்ளன. இவற்றில் தலத் திருஅவையின் தேவைகளை மனதில் கொண்டு சில மாற்றங்களைச் செய்வது வரவேற்கப்படுகிறது.

பங்கு அளவில் நடைபெறும் பங்கு மாமன்றம் (Parish Synod) மறைமாவட்ட மாமன்றத்தில் (Diocesan Synod) நிறைவுபெறும். அதற்கான ஒரு முன் தயாரிப்பாக இதை எடுத்து மறைவட்ட முதல்வர்கள் உதவியோடு ஒவ்வொரு பங்கிலும் பங்கு மாமன்ற அமர்வுகளை சிறப்பாக செயல்படுத்த பங்கு அருள்பணியாளர்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

கிறிஸ்துவின் மனநிலையில்

Sd/-

**+ ஆயர் நசரேன் சூசை**

கோட்டாறு மறைமாவட்டம்